கவலையில்லாததைத்தந்தால்-புண்யம்
கட்டிக்கொள்வீர்செல்வங்கிட்டிக்கொள்வீரென்றும் அடி

திருவண்ணாமலையிலேவண்டி-அவர்
செங்கமலப்புத்துபாதத்தோடு
திருமடங்கட்டிடச்செய்தால்—நாளுந்
தெழித்திடச்செல்வஞ்செழிக்குமென்றேநல் அடி.

பண்டாரங்களைச்சிறுத்தொண்டர்போற்று—கவி.

நிருமலன்றனைப்பூசித்து நின்றுநீருயர்ந்ததாலே
மருவுபுங்களைப்பூசித்து வஞ்சனையறுய்யவேண்டி
அருமையாயணிந்தவர்க்கு மாலையுமிருபோற்றி
திருவளர்திவ்யகஞ்சச்சேவடிபோற்றிபோற்றி

சிறுத்தொண்டர்சொல்—விருத்தம்.

அறுசுவைகறிகளோடு பனஞ்சமைத்திருப்பதாலே
நெறியுள்ளீங்களெல்லாம் நிறைந்திடபசித்தேயன்னம்
குறைவறச்செம்பொன்னுடை சோதிலாப்பொருளும்வேண்டி
செறிவுடன்பலவுங்கொள்ளத் தேவரீர்வருகுவீரே

வசனம். சரணஞ்சரணம் சிவனடியார்களே நீங்களெல்லோருமாக எனதுவீட்டில்வந்துவேண்டியபடியே நல்லபோசனஞ்செய்துபோகவாருங்கள்சிவனடியார்களே.

பண்டாரங்களுக்குஅன்னம்படைக்கிற-தரு
இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

போதுமெனப்புசித்திடுவீர்-மனம்
பொருந்தஅன்னம்புசித்திடுவீர்
சுவையிருந்தஅன்னம்புசித்திடுவீர்
பொங்கமுடன்மனமிங்கிதமாக
வருந்துமநும்பசிமுந்துதணித்திட — போது
நூதனகத்திரிபாகல்வாழை
நுண்ணியபூசினிபண்ணபொரிக்கறி
வெண்டைவட்டல்புகட்டல்குழம்புடன் — போது
பச்சடிதேங்காய்திருகல்-தேவர்
பருகுபருப்புடனுருக்கியநெய்தயிர்
பாயசமும்வடைதோசையுமிட்டனி — போது
உப்பினூறுகாயுஞ்செநநெய்
ஒப்பிலாவற்றல்கள்பொரியல்வகைச்சில
ஒன்றியேமோரில்குழம்புதணந்திட — போது
சர்க்கரைமுக்கனிபோடும்உண்டு
சந்தனமுமலராந்தமணிந்து
தழைத்தடைகாப்புமுவந்துநயப்பெற — போது

முதல்பண்டாரம் சிறுதொண்டரைவாழ்த்து-கவி.
அன்னமிகுபருப்புநெய்பா லரியநற்கறிகள்யாவும்
வன்னமுளபலகாரங்கள் மதுரமாங்கனிகளோடும்
இன்னமுடனளித்தாயுன்போ லியாவரேயுதவவல்லார்
வினவுபரதிரசம்படைத்தாய் மேன்மேலும்வாழிவாழி

உ-வது-பண்டாரம்வாழ்த்து-கவி.
நிறைந்தபோசனமளித்தீர் நிறைதிரவியமுமீந்தீர்
சிறந்தவஸ்திரங்கொடுத்தீர் செம்பொனும்பணந்தந்தீர்
அறந்தருந்தானமெல்லா மதிகமாயுதவினத்தால்
திறஞ்சிலபத்தியுண்டாய்ச்செழித்துமென்மேலுமவாழி

ந-வது-பண்டாரம்வாழ்த்து-கவி.
தெரியஞானிபருக்கெல்லாந் திருமடமும்புசிப்பும்
சரிகிரியாயோகிக்கெல்லாங் கருதுமெய்ப்பொருளுநல்கி
அரிபூசைசெய்வோர்தம்மை யாதரித்ததனாலும்
ஓரிர்திருமகனைப்பெற்றே யுகந்தனுதினமும்வாழி

பண்டாரங்கள் செலவுகேட்கிற-கலிவிருத்தம்.
உலகினிலன்பு-நிலையுடன்வாழ்வீர்
எலமுடனெமக்குச்-செலவுதாதருவீர்

வசனம். கேளுஞ்சிறுத்தொண்டரே ஊமதுமனையாளாகிய திருவெ

ண்காட்டிநங்கைவயிற்றிலே நல்லதிவ்யமாகிய ஓராண்பிள்ளை பிறக்கப் போகிறது அதனால்நீங்கள்சகலபேறும்பெற்றுச் சுகமாயிருக்கப்போகி றீர் எங்களுக்குச்செலவுகொடுத்தனுப்புஞ்சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-கலிவிருத்தம்.

ஆயுநான்மறைதேர்-நேயமெய்ஞ்ஞானத்
தூயரேநீங்கள்-போய்வருவீரே

வசனம், அப்படியேவாருங்கள் சிவனடியார்களே.

பிராமணர்வருகிற-பொதுவிருத்தம்.

சொரிந்திடுகிரணமுற்ற சூரியனுதயமாமுன்
திருந்தவேஸ்நானம்பண்ணிச் செபதபமோமஞ்செய்து
பொருந்துகாயத்திரியோதிப் பூசைசாற்றதுமுடித்து
விரிந்தநான்மறையுந்தேர்ந்த வேதியர்வருகின்றாரே

கட்டியக்காரன்-பொதுவசனம்,

அகோகேதப்படியென்றால சிறுத்தொண்டருடைய திருமாளிகை யைநாடிப்பிராமணர்வருகிறவிதங்காண்க.

பிராமணர்வருகிற-தரு சங்கராபரணம்—தாளம்-மிசுரம்
அந்தணர்நாங்களாறும்-கலைதெரிந்த-அந்தணர்நாங்களாறும்
சந்ததமுமுதயஸ்நானஞ்செய்புவிக்குத்
தாயாங்காயத்திரிதன்னைத்தவறாமலே செபிக்கும் அந்த
எங்களுக்கெல்லாமொழுக்குமுதற்பாதமா
யெழுதாமலோதுவோமிதற்குப்பின்னாலேதும்
சங்கையில்லாமலேசாஸ்திரபாறுவேதந்
தன்மையறிந்தெவர்க்குஞ்சாற்றுவதினுற்பாதம் அந்த
சந்திவந்தனைபிறைப்பிராமணிக்கநிற்போர்
அந்தால்பரிந்தெக்கியம்சத்தியமுர்வர்த்திக்கும்
முந்திபோமஞ்செய்தால்நினைத்தபொல்லாஞ்சித்திக்கும்
மொழியுஞ்செபதபத்தான்முதியோரொன்றேமதிக்கும் அந்த
வேதாந்திரத்திறைல்சூரியனையழைப்போம்
வெம்மையிருந்தாலக்கமழையையும்பொழிவிப்போம்
போகவண்டத்திலுள்ளவதிசயமறிவிப்போம்
பொருளுந்தக்கிரக்கொண்டும்புகலோம்மருமம்வைப்போம்

சிறுத்தொண்டர்-வசனம். நமஸ்காரம் நமஸ்காரம் சுவாமிகளே.

பிராமணர்—வசனம். நமஸ்காரம்நமஸ்காரம்சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்,

அரியவேதாகமங்களறிந்தபுண்ணியரேபோற்றி
திரமுளகலைகளெல்லாந் தீர்க்கவந்தவரேபோற்றி
பிரமகாயத்திரியோதும் பெருந்தவத்தோரேபோற்றி
சுரதலைப்ஞ்ஞானவா திசைவவேதியரேபோற்றி

முதற்பிராமணன்சொல்-விருத்தம்.

எனக்கொருபுத்திரனையுண்டிதில்வயதஞ்சுமாச்சு
தனக்குபநயனமிக்காத் தாழ்விறைவிலையடைந்தேன்

கணக்கவேபடிக்கவேண்டுங் கனகமுமுதலியென்றன்
பணக்கவலைநீக்கி மகிழ்ந்திடவருளுமிப்போ

வசனம். எனக்கொருபிள்ளையுண்டு அவனுக்குக் கல்யாணமாகியும் இன்னமும்உபநயனமில்லாமலிருக்கிறான் ஆகையால்அதைநிறைவேற்றிவைக்கவேண்டும் சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

நீறணிந்தாகம்பூண்ட நிமலனையனுதினமும்
தேறியேமறைகளெல்லாந் தேர்ந்தவந்தணரேபோற்றி
கூறுமுபநயனமிப்போ குறைவின்றிமுடிக்க (ச்)
சாறுநூற்றைம்பதுபொன்னீந்தே னவன்றனைமுடிக்கச்சொல்வீர்

வசனம். கேளும்பிராமணரே நானூற்றைம்பதுபொன்கொடுக்கிறேன் அதைவாங்கிக்கொண்டு உபநயனகலியாணத்தை முடித்துக்கொள்ளும்பிராமணரே.

உ-வது-பிராமணன்சொல்-கவி.

முன்னையோர்விவாகஞ்செய்தேன் பொழிமனைவியுமிறந்தாள்
பின்னுமோர்விவாகஞ்செய்யப் பெரியபொருள்களில்லை
அன்னவர்குறைவிலேயே யடைந்தனனாமையின்று
சொன்னபடிக்கிப்பிலேயேசச் சொர்ணமளிக்கவேண்டும்

வசனம். முன்னேயொருவிவாகம்பண்ணி யதற்பொன்சாதிமிறந்துபோய்விட்டாள் ஆகையினாலொருகலியாணஞ்செய்யவேண்டும் அதற்குமென்னாலிப்பொருளில்லை அதற்குவேண்டிய பொருள்களையுங் கொடுத்துக் கலியாணத்தைமுடிக்கவேண்டுஞ் சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

மாதிருபாகமேபோற்று மதிநதிசடையணிந்த
நாயகன்றன்னைப்பூசித்துக் குலங்குருவேதியரேபோற்றி
தீதுறுமோர்மணஞ்செய்தது செப்பியவிவாகஞ்செய்ய
ஆயிரம்பொன்கொடுப்பே னதனைப்பெற்றுக்கொள்வீரையா

வசனம். இதோ ஆயிரம்பொன்கொடுக்கிறேன் அதைவாங்கிக்கொண்டு கலியாணத்தைமுடித்துக்கொள்ளும்பிராமணரே.

௩-வது-பிராமணன்சொல்-கவி.

தனித்திருப்போரூர்வாழுஞ் சண்முகக்குருக்களென்பேர்
இனிதாயிருந்தவீடு மொருபக்கமிடிந்துபோச்சு
தினிமுடன்கட்டவென்று மென்னிடம்வாசமில்லை
அனியுடனதற்குவேண கனகமுமளிக்கவேண்டும்

வசனம். நாம்வாசஞ்செய்யுமூர் அழகியதிருப்போரூர் என்னுடையபேர்சண்முகக்குருக்கள் என்வீடொருபக்கமிடிந்துபோச்சுது அதைமறுபடியுங்கட்டுதற்கு என்னாலேயிருவாகமில்லை ஆனால்இதற்குவேண்டியபொருள்கொடுக்கவேண்டுஞ் சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

திரண்டாயிரங்கண்ணன்றன் தினந்தினம்போற்றிசெய்யும்
உருண்டாழித்தேரோன்கண்ணு யுமையாண்டுமைப்போற்றி

பரன்ட [illegible]
[illegible]

வசனம். [illegible]
பொன்கொடுக்க [illegible].

[illegible]

[illegible]

வசனம். [illegible]

[illegible]

[illegible]

வசனம். [illegible]

[illegible]

[illegible]

வசனம். [illegible]

[illegible]

[illegible]

வசனம். [illegible]

முதல்பிராமணன்-திருத்தொண்டரைவாழ்த்து கவி

ஓங்கமேதவராவன்னை முப்பத்தனந்திற்காக
திழுப்பூருடனில்லென்னும் வோர்பொன்றூற்றைப்பதிந்தீர்
கொழுக்கொம்பாயதனைச்சொண்டென் றுறைநீரமுடித்துக்கொள்
அழுக்கிலாமனத்தீச னருளினால்வாழ்கவாழ்க. ,வேன்

௨-வது-பிராமணன்வாழ்த்து-கவி.

பொருந்துகல்யாணத்திற்காய்ப் புகன்றமாத்திரமுகந்து
வருந்திடாவண்ணம்பொன்னை யீந்தந்தமகிழச்செய்தீர்
திருந்தவேயாரும்போலச் செய்யவல்லாரசன்தர்மம்
பருந்தமுதுண்டவீசன் மானருளாலேவாழ்க

௩-வது-பிராமணன்வாழ்த்து-கவி.

சடிக்கருமர்களைவென்ற சந்தன்வாழ்பொருர்தன்னில்
இடிந்திடும்வீட்டைக்கட்ட விரண்டாயிரம்பொன்றந்து
முடிந்திடச்செய்ததாலே முழுப்படவாவணிந்து
படிந்தவெண்ணீற்றோன்செய்ய பதமலரருளால்வாழ்க

௪-வது-பிராமணன்வாழ்த்து-கவி.

சொந்தமாய்வீடுகட்டுந் தொழில்செய்துபிழைத்துக்கொள்ள
முந்துமையாயிரம்பொன் மொழிந்திடுங்கவலைதீர்த்த
தந்ததாலுலகிலுன்போற் றருமஞ்செய்பவரில்லார்
சந்திரன்றனைப்புனைந்தோன் றன்னருளாலேவாழ்க

௫-வது-பிராமணன்வாழ்த்து-கவி.

பத்தர்களைத்துங்காசி பாட்டையிலோங்குகின்ற
சத்திரத்த நமக்குமிற்காய்த் தான்பதினாயிரம்பொன்
பத்தியாலளித்திட்டதால் பரமன்றனருளினாலே
சித்திஞானங்கள்பெற்றுச் சிறந்தவன்வாழ்கவாழ்க

வீரசைவர்கள்வாழ்த்து-பொதுவிருத்தம்.

திருக்கமழ்பாரிஜாதஞ் செங்கழுநீரிறையும்
உருக்கமாய்த்தேடியின்ன முன்னமையையறியவொண்ணா
பெருக்கமாய்நின்றவீசன் பொருப்பிலேசெவ்வழிபட்டுத்த
திருக்கிலேவாழும்வீர சைவர்களவருள்ளோரே

கட்டியக்காரன்-பொதுவசனம்.

அதோவந்தப்படியென்றல் அறிபு அபயங்கொடுத்தவிதழி அறியக் கூடாதபராபரசிவனது திருப்பாதத்தையந்த திரிகாலமும் மனதில்வைத்து பூசைசெய்கிற வீரசைவர்கள்வருகிறவிதங்காண்க.

வீரசைவர்கள்வருகிற-தரு-இ-ப-பியாகடை-அடதாளம்.

சைவர்வந்தாரே-சுத்தவீர-சைவர்வந்தாரே

சைவருங்களதலைதயாநிருதுநல்-பலையையானதிலிருந்திய சைவர்
சதலமர்களைநிதது-சிவ-னைப்பொன்னடியாகரசொகிறது
எல்லைபசவலிங்கத்தை-அரிபொட்டசவர்ந்தைவாங்கிடை சைவர

௫

அருச்சனைசெய்யுந்தோறும்-உள்ளத்-தமுதின்பமேயூறும்
பரிசுத்தமுள்ளதரிசனையுறும்-பரமானந்தசுகமேபெறும் சைவர்
மகிமையுள்ளதேவாரம்-திரு-வாசகந்தினவாரம
மகிழுறப்படித்தரியபூசனை-மதித்தேயுள்ளந்துதித்திடும்வீர சைவர்

சிறுத்தொண்டர்போற்றுங்கவி.

அருமருந்தென்னவிங்கே யனுகியெம்பண்ணின்மீது
பொருந்தியேநடந்துவந்த பொலமடிகள்போற்றி
திருந்தியசடைபார்க்கன்புசெயும்பெரியோரேபோற்றி
வருந்திடாதெளியேன்றன்னை வாழ்விக்கவந்தீர்போற்றி

இதுவும்-சிறுத்தொண்டர்-கவி.

அன்னம்வேண்டியதிருந்தா லகத்திடங்கொள்ளலாகும்
சொர்ணம்வேண்டியதென்றாலுஞ் சுருக்கினிற்பெறலாமன்றி
வன்னவஸ்திரங்கள்வேண்டின் மகிழ்வுடன்றருவேனுள்ளம
இன்னதென்றுரைத்தீராகி லினிதுடனளிப்பேன்சொல்லீர்

வசனம். கேளுஞ்சுவாமிகளே தங்களுக்கன்னம் வேண்டியிருந்தால் யாதொருதடையில்லாமல்போசனம்பண்ணலாம் அல்லதுதிரவியமே வேண்டியிருந்தாலுந் தருவேன் பின்னும் ஆடையாபரணம்வேண்டியிருந்தாலுங்கொடுப்பேன் நீங்கள்மனதிலேநினைத்துவந்ததை இன்னதென்றெனக்குத்திருவுளம்பற்றவேணும் சுவாமிகளே.

முதல்சைவர்சொல்-விருத்தம்.

வறுமையாற்பசிநோய்தீர வாயெயினைத்திந்நேரம்
குறைப்புமொங்குங்கேட்டுக் குறையுடனிங்குவந்தேன்
உறுதியாயுள்ளப்பரிந் தோரவேளைபோசனந்தான்
திறமுட னெனக்கிப்போது செய்விக்கவேண்டுந்தொண்டா

வசனம். கேளுஞ்சிறுத்தொண்டரே எனதுபசிநோயினாலே ஊரெங்குந்திரிந்து உமது அன்னதானசீர்த்தியைக்கேட்டுவந்தேன் இப்போதெனக்கொருவேளை போசனஞ்செய்விக்கவேண்டுஞ் சிறுத்தொண்டரே.

௨-வது-சைவர்சொல்-விருத்தம்.

உமையொருபாகன்செய்ய வுண்மையாமருளினாலே
அமையுமுன்றயவினாலே யானைத்தாக்குங்காழ்ச்சியில்லை
எமதுமாமடாலயத்தி லிளைத்துசிரமையாய்ப்போச்சு
சமமுறக்கட்டுதற்குத் தமனியம்வேண்டுந்தொண்டா

வசனம். கேளுஞ்சிறுத்தொண்டரே அந்தப்பரமசிவனது கிருபையினாலேயும் உமதுதயவினாலேயும் எனக்கொருதாழ்வுமில்லை ஆனால்நானிருக்கிறமடந்திருவாரூரில் இடிந்திருக்கிறது அதைக்கட்டுகிறதற்குப்பொருஞ்சந்திரவியம்வேண்டுஞ்சிறுத்தொண்டரே.

௩-வது-சைவர்சொல்-விருத்தம்,

அன்னதுக்குரியதொண்டா வனேகப்பேர்மகிமைக்கேட்டுத்
துண்டிணைவருள்வாரில்லை சொர்காயநடுபத்து

வண்ணமென்றிராமும்வேறு மகிழ்வுடனளித்திராகில்
நண்ணியவன்னமுண்டு நலமுடனேகுவேனே

வசனம். கேளு சிறுத்தொண்டரே நானும்அனேகம்பேரிடத்திலே போய்க்கேட்டேன் ஒருவருங்கொடுப்பாரில்லை மேலுங்கட்ட ஆடையில்லாமலலைகிறேன் இப்போது ஆடைகொடுத்தீராகில் உமதிடத்திலே அன்னமுஞ்சாப்பிட்டுப்போகிறேன் சிறுத்தொண்டரே.

சடைவாது-சைவர்சொல்-விருத்தம்.

ஈசன்றனதருளாலே யெனக்கொருகுறையுமில்லை
நேசமாயிருந்தென்னேரம் நெருங்கியதபசுபிள்ளை
பூசைக்கப்பூரந்தட்டும் பொருந்துவட்டகைவிளக்கும்
காசெடுத்தோடிப்போனான் கழறியது[illegible]தொண்டா

வசனம். கேளும்சிறுத்தொண்டரே அந்தப்பரமேசுவரனுடையகடாட்சத்தினாலே எனக்கொருகுறையுமில்லை என்னிடத்திலிருந்ததபசுபிள்ளை என்னுடையபூசைக்கட்டுமுட்டுகளையெல்லாம் எடுத்துக்கொண்டோடிப்போனான் சிறுத்தொண்டரே.

பண்டாரங்கள்சொல்-விருத்தம்,

பசியினால்வருந்தாக்கெல்லாம் பண்புடனன்னமீந்தீர்
உசிதமாய்வேண்டுவோருக் கொண்பொன் தனமுமீந்தீர்
விசிதமாய்க்குறையாவண்ணம் வேண்டினோர்க்[illegible]
[illegible]வருவோர்க்கெல்லாங் கனகாதாரமீந்தீர்

வசனம். சீர் நற்சிவனடியார்களே சிறுத்தொண்டருடையபெருமை [illegible] அன்னமிடுகிறார் [illegible] திரவியமுங்கொடுக்கிறார் [illegible] வந்தபேர்க்கெல்லாம் மனக்குறைகளைத்தீர்க்கிறார் [illegible] இவர் [illegible] சிவனடியார்களே.

பண்டாரங்கள்வாழ்த்து-கலி,

[illegible] மிடர்குறைதவிர்த்தருந்து
காசினிதனிலவிளங்குங் கற்பகத்தருவேவாழி
[illegible] வாழி
தேசிலோமாறுமன்பு செய்சிறுத்தொண்டர்வாழி

கட்டியக்காரன்சொல்லுது-வசனம்

இந்தப்படிசிவனடியார்கள் சிறுத்தொண்டரை வாழ்த்திவிட்டுப்போனபிறகு [illegible] கொண்டு [illegible].

[illegible]-அகவற்பா.

மாதவரொன்றிவண்ணையாயிருக்க்
காதலாய்ப்[illegible]
(உ)பாச[illegible]
[illegible]செயலினைப்பொருந்தே

(௩)மாசத்தில்முதிர்ந்தநற்றேங்காய்ப்
போன்றுருவாகிப்பொலிவுடனயர்ந்தே
(௪)மாசத்தில்நயந்தமேதோர்தலையுங்
காலுடன்கையுங்கனமுடன்றோன்றி
(௫)மாசத்திலவயவம்பிரிந்து
மிஞ்சியநரம்புவெள்ளெலும்புண்டாம்
(௬)மாசத்திலமைந்தமேதோர்குடலும
வீறுமீரலுடன்மிகுந்தசையடாங்கே
(௭)மாசத்திலெழுந்துயிர்ப்புடனே
வாழுங்கல்லறிவும்வந்தினிதாகி
(௮)மாசத்திலிசைந்தெவற்றினுக்கும்
முட்டிலாவுணர்முதிர்ந்திடவெண்ணி
(௯)மாசத்துயர்ந்ததியானமாய்
அன்புறுபத்தியதிகமாய்வளர்ந்து
(௰)மாசத்திற்பாக்கபேருலகில்
கத்தியேகுழவிநருளிவந்திடுமே

திருவெண்காட்டுநங்கை இடுப்புநோய்படுகிற விருத்தம்.

உளைக்குதேதன்னடி வயிற்றை வேயுதேதசையுஞ்சாலும்
களைக்குதேதேகமெல்லாங் கலையுதேதெடுத்தசேலை
தளைக்குதேநில்கமெல்லாஞ் சொருகுதேகண்ணிரண்டும்
இளைப்புமேமிகுதியேவேலைக் கிசைந்தசந்தனப்பெண்மாதே

வசனம், கேளுஞ்சந்தனநங்கை இன்றையதினம் ஏதோஇரக்கிறாக்து உடம்புநோவகையாய்வருகுது கைகால்களெல்லாநடுகுது இடுப்பு பிடிங்கிற்றுப்போகிறது தாகமாயிருக்கிறது அதனாலெனக்குமிகவும பயமாயிருக்கிறது நானென்னசெய்வேனடியம்மா,

சந்தனநங்கைசொல்—விருத்தம்,

பலபலவாகவெண்ணிப் பயப்படவேண்டாமம்மா
நலமதாங்கீர்த்தியுள்ள நல்லபுத்திரனைப்பெற்று
நிலமதின்மகிழ்வாழ்வாய் நிமிஷநேரத்திற்பாரும்
சலமுறுங்கவலைநீங்குஞ் சற்றுமேபொறுத்திடாயே

வசனம். கேளுமம்மா திருவெண்காட்டுநங்கை உலகத்திலேயாவர்கள்பிள்ளைகளைப் பெறுகிறபேர்களெல்லாம் என்னபோ ஏதோவென்றெண்ணுதெல்லாமெண்ணிவருத்தப்படுவார்கள் அப்படியிருந்தாலும் நீமகாஉத்தமியானபடியினாலே உனக்கொருகுறைவுமவாராது நீஒன்றுக்கும் பயப்படவேண்டாமம்மா.

சந்தனநங்கைசொல்-கொச்சகம்,

கற்புமிகுவெண்காட்டுநங்கையெனுநாயகியாள்
கெற்பவேதனையினாற்றளர்ந்துமிகவருந்தி
பற்பலவேங்கவலையினாற்பாதவித்துவாடுகின்றாள்
தற்பதியின்மருத்துவச்சி தன்னைவரச்செய்திடுமே

வசனம். கேளுஞ்சுவாமி என்னம்மைதிருவெண்காட்டுநங்கையார்மிக வுங்கெர்ப்பவேதனைபடுகிறபடியினாலே அதிகசீக்கிரமாகமருத்துவச்சியை வரவழைக்கவேண்டுஞ்சுவாமி,

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

கருத்தினுக்கிசைந்தவேலை களைச்செயுஞ்சேர்வைக்காரா
வருத்தமில்லாமல்கெர்ப்பமங்கையர்தங்கட்கெல்லாம்
பெருத்ததோருலகிற்பிள்ளைப்பேறுகடன்னைப்பார்க்கும்
மருத்துவக்கிழவிதன்னைவந்திடச்செய்குவாயே

வசனம். கேளுஞ்சேர்வைக்காரா அதிகசீக்கிரமாகப்போய் மருத்துவக்கிழவியையழைத்துக்கொண்டுவாரும்பிள்ளாய் (அப்படியேயழைத்துக்கொண்டுவருகிறேன்சுவாமி)

மருத்துவக்கிழவிவருகிறபொதுவிருத்தம்.

நரைக்கியகலையுமெங்கும் நரைத்திடுமயிருந்தேங்காய்
குடுக்கைபோல்வாயுமுள்ளே குழிந்திடுங்கண்ணுங்கோலை
இடுக்கியகையுந்தொங்கி யிறங்கியமுலையுங்கூனல்
மடக்கியமுதுகுமாக மருத்துவக்கிழவிவந்தாள்

பொது-வசனம். அகோதெப்படியென்றால் சிறுத்தொண்டருடைய சமுகத்திற்கு மருத்துவக்கிழவிவருகிறவிதங்காண்க.

மருத்துவக்கிழவிவருகிற-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-மிசுரம்.

மங்கையர்தங்களுக்கிங்கிதமாச்செய்யுமருத்துவக்கிழவிவந்தாள்
பங்கமேவியவெண்காட்டுநங்கை
மனங்களிகூருங் கருணைக்காய்மிகத்தெரிந்து — மங்கை
தோளின்மூலைமுழங்காலிலடிபடச்
சங்காலுமேயொருசெங்கையிடிபட
கோலுமொருகையினிலூன்றிநடந்துகொண்டு
குத்தினப்பனுடனேகத்திதத்திக்கொண்டு — மங்கை
காதிலணிந்திடுமோலைச்சுருள்களும்
கலைந்துபிதுங்கிகருலுங்கியதுவர
கோதிற்பஞ்செனவேயொத்ததலைநரைத்து
குழிந்தகண்ணுடனேதங்கிழிந்தசேலையுடனே — மங்கை
அவனியிற்பெரியதுரைகளினால்மெச்சி
யதிகவெகுமதியேபெற்றிருப்பவள்
கவலைவருத்தமிருந்தாலுமுள்ளங்
களிக்கச்செய்தேமெய்தளிர்க்கச்செய்யுநல்ல — மங்கை

மருத்துவக்கிழவிபோற்று-கவி,

வில்வமுமறுகுஞ்சேர்ந்தவிரிசடைப்பரமர்தாளை
செல்வமாய்ப்பெற்றுவாழுஞ்சிறுத்தொண்டதேவாபோற்றி
வல்லவன்போலயிங்குவரவழைத்திட்டசெய்தி
சொல்லித்தள்ளாதேதெம்வன்னைச்சுறுக்கினில்நுப்புவீரே

வ-ம், என்னையழைப்பித்தகாரியந்தெரியச்சொல்லவேண்டுஞ்சுவாமி,

சிறுத்தொண்டர்சொல்—விருத்தம்.

மருத்துவமாதுநீகேளாய் மனைவிக்குமென்மனைவியாரும்
பெருத்தகெர்ப்பனையாய்வாதைபெருகிஎக்கையறிந்துமாதர்
ஒருத்தருந்துணையில்லாமலுற்றும்வாடுகின்றாள்
திருத்தமாயவிடஞ்சென்றுசீக்கிரமாய்ப்பார்த்திடாயே

வசனம். கேளும் மருத்துவச்சி இப்போது என்மனைவியாளாகிய திருவெண்காட்டுநங்கை கெர்ப்பவேதனைபடுகிறபடியினாலே நீபோய்மருத்துவம் பார்க்கவேணும். மருத்துவச்சி அப்படியே போய்ப்பார்க்கிறேன் சுவாமி.

மருத்துவச்சிழவி-வசனம்.

ஆரடியம்மா திருவெண்காட்டுநங்கை(வனம்மாபாட்டி)என்னமாயிருக்குதம்மா(உட்காருமம்மாசொல்லுகிறேன்)

திருவெண்காட்டுநங்கை கெர்ப்பவேதனைபடுகிற
அசவற்பா-இ-ம்-எதுகுலகாம்போதி

புழுங்கியென்னுள்ளம்புழுபோற்றுடிக்குது
எழுமபிகன்மேனியெல்லாம்வெயர்க்குது
பொருமுடல்பச்சைப்புண்ணாயிருக்குது
காரார்போலுங்கண்களிருளுது
இலவுபோலிருக்கும்இதழுங்கறுக்குது
இலையுதிர்க்கனிபோற்பழம்பேசுறேர
இணையிலாமுலைகளிரத்தஞ்சரியுது
பணியாவல்குல் பறபறென்றூறுது
மற்றெங்குமில்லைமார்பினின்முட்டுது
உற்றடிவயிற்றினுளைக்குதென்செய்வேன்
சென்றமுபக்கதிரண்டுதுடிக்குது
பொங்கமாய்வயிறுநிற்புரளுதென்னம்மா
விந்தைபாதத்திற்வேர்வைதுடையடி
உந்தியின்கீழுளைக்குதென்செய்வேன்
தருணமிதென்னைத்தாங்கிப்பிடியடி
வருதலைக்கவந்தைவாழ்த்துமென்னம்மா

வசனம். அடிபாட்டிமருத்துவச்சி (வனம்மா திருவெண்காட்டுநங்காய்)இருந்திருந்தடிவயிற்றைநோகிறது இந்தஇரண்டுபக்கமுமிழுக்கிறது உடம்பெல்லாம்புண்ணாகுது அடிவயிறுபச்சைப்புண்ணாயிருக்கிறது அதனாலெனக்குமெத்தவருத்தமாயிருக்குதடிபாட்டி.

மருத்துவச்சிசொல்—கொச்சகம்.

அசங்காதிருசற்றமுத்திமனப்பொறுத்து
வசங்காபல்லவலேவருத்தமிலாமற்பார்ப்பேன்
கசங்காதுடம்பெனக்காவாசியுண்டதனால்
நிசங்காசொல்றொடியினிற்பார்பயப்படாதேயம்மா

வசனம். கேளும்மா திருவெண்காட்டுநங்காய் இந்தவுலகத்திலே என்னைப்போல் சமர்த்தாய்மருத்துவம்பார்க்கிறபேர்கள் ஒருவருண்டோ

ப்பேர்ப்பட்ட வருத்தமானநோயிருந்தாலும் என்கைபட்டால் எல்லாநோயுந்தீர்ந்து நல்லசௌக்கியமுண்டாகும் அப்பேர்ப்பட்டவைகளை சினைக்கிருக்கிறபடியினாலே உனக்குஉடம்புசௌக்கியமாகமருந்துவிப்பார்க்கிறேன் நீபயப்படவேண்டாமம்மா,

திருவெண்காட்டுநங்கையார் கர்ப்பவேதனைப்படுகிற—தரு
இ—ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

என்னசெய்குவேனென்னமோ—மிகநோகுதே
என்னசெய்குவேனம்மே
வன்னமுங்கறுத்து-வாய்வாய்ப்பெருகுதே—ஆ-ஆ	என்ன
இப்பாசனிற்றுப்போகுது-கனத்தவயி
றிருந்திருந்ததிகமாகுது
பிடிப்பநெகிழ்ந்துபிள்ளைபண்டுநெளிந்துவிறுதே—ஆ—ஆ	என்
வேர்விறுற்சலமாகியேமெலையபனைக்குதே—ஆ ஆ	என்
பக்கத்திறகைபோல்நடுக்குது சும்மாயிராமல்
பறப்பறவென்றாரவெடுக்குது
முக்கிணலுநதான்பெருமூச்சுவந்தடைக்குதே-ஆ-ஆ	என்

மருத்துவச்சிசொல்-வசனம.

நலலதம்மாநீபயப்படாதே இன்னஞ்சற்றுநேரத்திலேபிள்ளையைப்பெற்றுக்கையிலேந்தப்போகிறாய் நீயேன்பயப்படுகிறாய்பயப்படாதே

பொது-விருத்தம்.

அங்கண்மாசிலுத்தில்வாழும் அரிவையர்தமக்குச்செய்ய
பங்கயமாதுயர்ந்தாள் பண்பினில்வனப்பில்பத்தி
இங்கிதத்தினிலிவட்போ லிலைபெறுநதிருவெண்காட்டு
நங்கையார்பெற்றபிள்ளை நல்லஆண்பிள்ளைகண்டீர்

சந்தனநங்கைசொல்—விருத்தம்.

மூவருமறியாமுக்கண் முதல்வனுக்கன்புசெய்யும்
தேவரீரருளால்நோய்கள் தீர்ந்தெனதிறைவியாரும்
பூவினிலேவருமபோறறப் பொருந்தவேற்குமாரனைப்போல்
ஆவலுங்குறையுந்தீர ஆண்பிள்ளைபெறறாளையா

வசனம. சேருந்தசுவாமி நம்முடையமனக்குறைகளெல்லாந்தீரும்படியாய் நல்லஆண்பிள்ளைபிறந்ததையா,

சிறுதொண்டர் வசனம்.

கேளுஞ்சேர்வைக்காரா(சுவாமி)ஆனால் எல்லோர்க்குஞ்சருக்கரை வழங்குப்பிள்ளாய்(அப்படியேசெய்விக்கிறேன்சுவாமி)

பொது-விருத்தம்.

நர்மிடகளிப்புப்போல நானிலத்தெவருமெய்த
செழமைசேர்மணியும்வேளா திரவியங்களிங்கள்

இசம்மைமென்முலையார்தானங் கோதானம்பூதானங்கள்
இம்மையிலளிப்பீரென்ன வெவருக்குங்கொடுத்திட்டாரே

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

செயமுடனிங்குநாளுஞ் சோறைசெய்சேர்வைக்காரா
வையதினிலெவர்க்குமுந்த மருத்துவமாதினுக்கு
நயமொழியாளைத்துநல்ல நாணயச்சேலைதந்து
தயவுடன்பொருளுமீந்து தழைத்திடவனுப்புவாயே

வசனம். சேனுஞ்சேர்வைக்காரா நம்முடையமருத்துவச்சிக்கு நல்ல ஆடைப்பாபரணங்களாகிய வெகுமதிசொரித்தனுப்பும்பிள்ளாய்.

அப்படியேகொடுத்தனுப்புகிறேன்சுவாமி

குழந்தையைத்தாலாட்டுகிற—தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

ஆராரிரோ ஆராரிரோ ஆராரிரோ ஆராரிரோ
திங்கட்கொழுந்தே செழுந்தாமரைமுகமே
தங்கப்பிரதமையே தரையில்வருங்கற்பகமே ஆராரிரோ
குஞ்சரக்கன்றே குலவுங்கடலமுதே
பஞ்சவர்ணக்கிளியே பாடுமிசைக்குயிலே ஆராரிரோ
மரகதக்குன்றே மாணிக்கமாமலையே
பரவுசுவைக்கனியே பாகேசருக்கரையே ஆராரிரோ
செந்தேன்மதுரமே தெவிட்டாதபாற்சுவையே
புந்திமகிழவந்த புண்ணியமேயென்றவமே ஆராரிரோ

பொது-ஆசிரியவிருத்தம்

செப்பரியதெய்வங்கள்காப்புமுதலானசெங்கீரைதாண்டியுஞ்
செய்யதாலாட்டியும்பின்புசப்பாணியுஞ்செங்கரத்தால்கொட்டியும்
ஒப்பிலாமுத்தங்கொடுத்தும்வாவாவென்றுரைத்தாயழைக்கவந்தும்
உயர்ந்தஅம்புலிதனைப்பார்த்துமிகுமணலாலுடுத்தசிற்றிற்சிதைத்தும்
தப்பிலாச்சிறுபறைமுழக்கியும்மணியாற்றமைத்தசிறுதேருருட்டிச்
சந்ததம்விளையாடுபிள்ளைகளுடன்கூடித்தானுமேவிளையாடியும்
இப்புவியிலெவர்களும்புகழவருகுணதாரிசைந்தெழிலணிந்தமார்பர்
வாளர்கலமுலவுசீராளதேவனெவர்களும்விளம்பினரோ

கட்டியக்காரன்-பொதுவசனம்

அதேதெப்படியென்றால் காப்புமுதலாகியபத்துப்பருவமுங்கழிந்தபின்பு சிறுபிள்ளைகளுடனேகூடி விளையாடிக்கொண்டு வருகிறபோது சீராளதேவனென்று எல்லோரும்அழைக்கத்தக்கதாக ஐந்துவயதானபிறகு இப்பால்நடந்தகதையைச்சொல்லுகிறவிதங்காண்க.

பெயரிட்டு உபநயனஞ்செய்கிற கொச்சகம்.

பாராளரிலுயர்ந்தபண்பாளரோமிகுந்த
சீராளனென்றுதிருநாமஞ்சாற்றியபின்
வாளம்மெய்முரசமேற்றபல்லியமுழங்க

நீ.ர் நாதநாயனீண் மனை முஞ்செய்தாரோ

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

விராளர்தங்கட்செல்லா மிருந்திடுஞ்சீர்வைநகரார
போராளரடியர்தம்மிற் பிரசங்கியவெளியேறியேத்
தாராளவட்டாரோடு தமிழதுபடிக்கவெனும
சீராளதேவனைச சீக்கிரம்வரச்செய்வீரே

வசனம். கேளுஞ்சீர்வைக்காரா நமதுடைய சீராள தேவனையழைப்பித்துக்கொண்டுவாருமபிள்ளாய் (அப்படியேயழைத்துக்கொண்டு வருகிறேன்சுவாமி)

மறையொருநான்குமோதி வருந்தசெந்தமிழிலுள்ள
துறைவிளக்கமுண்மை தெலிவாமடியரோடு
இறையையாயாபள்ளிக்கூடக் கிருந்துபோசத்தவேண்டி
திறமைசேர்திருச்சீராள தேவ நமவருவீர் நீரே

கட்டியக்காரன்-பொதுவசனம்.

அகோசெப்பட்டவென் சொல் நாளுமே நமது ராசாங்கத்திலுள்ள சகலாகலசம்பன்னரான தொண்டர்களெல்லாம் கேளுங்கள் சிறுத்தொண்டநாயனார்குமாரர் சீராளதேவர்பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறவிதம்பாருங்கள்.

சீராளர்வருகிற—தரு—இ—ராகம்—நாட்டை—அடதாளம்

சீராளவந்தார்-இதோ—சீராளவந்தார்

பாராளர்மதிக்க உயர்—பலகலைகளுந்தேர்ந்த சீராள
சரிகைக்குல்லாய்தரித்து-தோள்-கனிமுத்துமாலையணிந்து
சரைப்பட்டுச்சோமன்தரித்து-முத்து-சல்லாவுருமாலணிந்து சீ
ராசந்தனமணிந்து—மின்—தங்கமணிப்பூண்டணிந்து
கூறுபாலனைத்திரிந்—தேப்-பூசாலிப்பூணிந்து சீராள
காதில்வயிரமொட்டு-மகர-காதுக்குண்டலமிட்டு
சோதிப்பதக்கமொட்டு—சுடர்-மாலைதொங்கவிட்டு சீராள
காயத்திரிசைபரோபிந்து—திரி—சாலங்களைத்திதிக்க
சாயக்கருமமொழிக்கு-பால—சந்திரனைப்போலுதித்து சீராள

சீராளர்போற்றி—கவி.

மறையெலாந்தெரிந்தவா போற்றி
நிறையெலாங்கூடி நின்றவா போற்றி
பொறையினைநாமிப்புதநவா போற்றி
இறைவிளுசன்பாடமுஞ்சொன்னவேபோற்றி

வ-ம. என்னையழைப்பித்தகாரியம் திருவுளம்பற்றவேண்டுமையா,

சிறுத்தொண்டர்வாழ்த்து-கவி.

போதகன்செய்தபுண்ணியமேவாழி, நீதமாமென்றனிதியமேவாழி
சேதனமானசெல்வமேவாழி, காதலாவாழிகண்மணிவாழி

வ-ம. கேளுமப்பாசீராளதேவா உனக்கிதுவரையில ஐந்துவயதாகக்

கல்விக்குப்பருவமாச்சுது ஆகையால் நீபள்ளிக்கூடத்திற்குப்போய்ப் படிக்கவேண்டுமப்பா (அப்படியேபடித்துக்கொள்ளுகிறேனையா)

உபாத்தியாயர்வருகிற-போதுவிருத்தம்.

திடம்பெறுபாகைபூண்டு திலதவெண்ணீறணிந்து
இடம்பெறவேட்டிசட்டி யிசைந்தவுத்தரீயஞ்சூட்டித்
தடங்கையிற்பிரம்புகொண்டு சம்புவையுள்ளங்கொண்டு
படஞ்செலப்படிப்புச்சொல்லும் வாத்தியார்வருகின்றாரே

கட்டியக்காரன்-பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் வித்தியார்த்திகட்குப் படிப்புச்சொல்ல உபாத்தியாயர்வருகிறவிதங்காண்க.

உபாத்தியாயர்-வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

உபாத்தியாயர்வந்தார்—கல்விமிகுந்த-உபாத்தியாயர்வந்தார்

ஆத்தியணிந்தசடைஅரனுக்கினியதொண்டு
அறியாப்பயல்கடம்மையதட்டிப்பிரம்புகொண்டு உபா

காரிகைநன்னூல்களுமெம்மாத்திரம்அகத்தியந்தொல்
காப்பியக்கடலைக்குடித்திடுவோர்—யாரும்
கருதருஞ்சிலப்பதிகாரஞ்சிந்தாமணியின்
கருத்துரையைவிரிக்கப்படுவோர்

சீறியஆசுமதுரஞ்சித்திரவிஸ்தாரமொரு
தினத்திற்பாடியவிலக்கணத்திற்குற்றமேதேடும் உபா

சித்திரக்கவிகளைவிசித்திரமாசப்பாடியே
நேறிலெட்டநாகத்திலும்அடைப்போர்—புத்தி
சேர்ந்திடும்அஷ்டாவதானஞ்சோடசாவதானஞ்செய்து
செப்புமெதிரியைநன்றாய்ப்புடைப்போர்

வித்தகஞானசாஸ்திரம்வேண்டியபட்டுப்படித்து
மெய்க்குருபதமடைந்தாகநமங்சண்முடிக்கும்
பலத்தகபறும்புசழ்நிலைத்தவொட்டக்கூத்தனென்
பாட்டன்மாரிடத்தினிற்படித்தவர்-நல்ல
பைந்தமிழ்ப்புலவருக்குமுந்தியவெழுத்தாணியும்
பரிட்சைதெரிந்தபேருங்கொடுத்தவர்
நிலத்தில்தமிழறியாச்சேற்றுக்கவிசொல்லாம்
நெருங்கயாட்டாதினைத்திருப்பிப்பாராதோடுவோர் உபா

வித்தியார்த்திகள்—போற்றுகவி.

ஐயரோசரணம்வெள்ளியணிமொழித்தாளிகொண்ட
கையரோசரணங்கல்விக்கடலினைக்கடந்தஞான
மெய்யரோசரணம்நல்லவேதவேதாந்தமோதும்
துய்யரோசரணம்பாததுணைமலர்ச்சரணந்தானே

வசனம். சதுர்விதவுபாயங்களினாலே சகலசாஸ்திரங்களையும் சகலகலைக்கியானங்களையும் எங்களுக்குக்கற்பிக்கின்றகுருவேசரணம்.

வித்தியார்த்திகளை-வாத்தியார்வாழ்த்துகிற—விருத்தம்

கந்தப்பாகுழந்தைவேளா.கதிர்வேலாவாழிவாழி
சொந்தப்பாலாவிசாகாசுந்தராவாழிவாழி
சந்தப்பாவினங்களெல்லாந்தப்பாமற்படித்துநாளும்
இந்தப்பாரினிலென்பேரையெடுக்கும்பிள்ளைகளேவாழி

உபாத்தியாயர்படிப்புச்சொல்லுகிற-விருத்தம்.

சொற்றிடுங்காலமேயெண்சுவடியைப்படியுங்கோள்பின்
சற்றுநேரத்திற்பிள்ளைத்தமிழ்க்கலம்பகம்படித்து
பற்றுதலில்லாமற்பின்பாடங்கள்படித்துக்கட்டி
யுற்றநல்பழையவன்னமுண்டிடச்செல்குவீரே

வித்தியார்த்திகட்கு-உபாத்தியாயர்
சட்டித்திட்டம்பண்ணுகிற—அகவற்பா.

பேசியசட்டாம்பிள்ளைபாகிய-யாசிலாமனைனிவ்வாக்கியக்கேளு-வ
ருமரிச்சுவடிகள்வாசிக்கும்பயல்களை- ஒருமையாய்ப்பிரித்தேயோரிடம்
வைத்து-கூடவேபடிக்குங்குருநாதசுவாமியை—ஆடவொட்டாமலவன்மே
ற்காவல்வை- இலக்கணம்படிக்குமெண்ணியபயல்களைத் — தலைச்சமாக
வோர்துண்டாய்ப்பிரித்து-தப்பாய்ப்படித்தால்காதையிலடிக்க—அப்பா
சாமியையவன்மேற்காவல்வை-எண்சுவடிகளைக்கூடன்படிக்கும் - திண்
ணியபயல்களைச்சேர்த்தொருகூட்டமாய்-நேராய்ப்படிக்கநிறுத்திவெழு
த்துப்-பாராயற்கேட்கக்கோபாலையங்காரை- நிகண்டுதிவாகரம்நைடதம
பாரதம்—அந்தப்பிள்ளைகட்கறைந்திடுநீயே—காரிகைநன்னூல்கனந்த
தொல்காப்பியம்—பாரிபவிலக்கணம்படித்தவனை-வனமுறுநல்லபெரியா
னைநபாக-இனிதுடன்படிக்கஎன்னிடத்தனுப்பு-சாப்பிடவனுப்புஞ்சமை
யத்தெல்லோரையும்-கோப்பியாசக்குளித்திடச்சொல்லி—வெண்ணீற
ணிந்துவிநாயகர்பூசை—பண்ணினபின்பழையவெள்ளன்னம்—உண்டபி
ன்நல்லவொழுக்கமாய்வழியிற்சண்டைசெய்யாமற்றமைத்திங்குசேரச்
சொல்-பேர்கள்படிக்கும்பிள்ளைகளுக்கு- ஏடுடனுருக்கிலெழுதிச்சொல்
லிவை-ஒருவரிச்சட்டமோலையிற்பெருக்க -இருவரிச்சட்டமெழுதிடச்
சொல்வாய்—சிற்றெழுத்தெல்லாஞ்சிலரெழுதட்டும்-மற்றவர்பெரியவா
சகம்படிக்கட்டும்-கணக்குசொல்பார்க்குங்கருத்துள்ளோர்க்கெல்லாம் -து
ணுக்காய்த்தொகையைநவன்றெழுதிக்கொடு— இதற்குளேநானும்வ
ன்மனைசென்று-நதிப்புனன்மூழ்கிநன்னீறணிந்து - சிவபூசைமுதலாஞ்
செபதபஞ்செய்து- உவகையாய்ப்போசனமுண்டொருமுகூர்த்தத்தில்
வருகுவேனியுன்பிள்ளைகளைநீயுமேகி— மருவன்னமுண்டுவந்துமேசுருக்காய்
ப்-பகலிற்போசனம்பண்ணிப்பயல்களை —மகிழ்வுடன்சுருக்காய்வந்து
சேரச்சொல்--பொடியாம்பயல்களைப்பொறுக்கியோர்கூட்டமாய் • நெடி
யபேர்சொல்லநிலத்திலெழுதச்சொல் - இலக்கநெல்லிலக்கமிவைப்படி
போரை• தலக்காரகவோர்துண்டாய்ப்பிரித்துக் - கூட்டக்கழிக்கக்குண
முடன்பெருக்க-நேரட்டமாய்ப்பார்க்கதுவன்றெழுதிக்கொடு —சொற்ப

டியேஎண்சுவடிகள்படிக்கும்-நற்பயல்களுக்குநல்லசேர்கணக்குப்பாரக்கணக்கும்-பருவிசைகணக்கும்வாரக்கணக்கும்-வகையுடனெழுதிவைபெரியதோர்பலகைப்-பிரியமாயழைத்துவரிசையாயவர்க்கு-கட்டிச்சணக்கும்நாட்டிற்பயிர்செய்நல்லசணக்கும் - நீட்டிக்குழிமாறுமகிலத்துச்கணக்கு-சொல்லிப்பின்புநோல்சாப்பிடவுனை -ஒலையாய்கைடகளை [illegible]ந்நோல்லி-பானயின்பாடமதனை[illegible]ந்சொல்லுவ[illegible]- சாணமாச்சா[illegible] [illegible]னாடன்-முறைசொல்சொல்லிபூர்த்தியெல்லோணையும் [illegible] [illegible]நீபறுப்பிடுமே.

சிறுத்தொண்டர்-சேர்வைக்காரனுக்குச்சொல கவி.

பழுவிடைபொன்னவிந்நவைகியசேர்வைக்காரா
[illegible]நமி[illegible]ன்றைக்குச்செல்லாய்பரம்பரையாகவந்த
தொழு[illegible]நாவிதனை[illegible]ங்கொர்சொல்லிகோன்மோனுங்கல்வி
[illegible]ழு[illegible]னின்றிருந்தவா[illegible]ந்திபார்க்கவைவரச்செய்வாயே

வசனம்.

[illegible] சேர்வைக்காரா [illegible]ருசிராளகேனாப் பள்ளிக்கூட[illegible] [illegible] அரசாகைசலவைகைசான்திலங்கவெள்ளார் [illegible] [illegible]துஉபா[illegible]தியாயனைப்பள்ளிக்கூடத்தி[illegible]ன்று அழை[illegible]வாருமபிள்ளாய் (அப்படியேயழைத்துக்கொண்டுவருகி[illegible])

[illegible]டுயகபான்சொல-விருத்தம

[illegible]கைகாரனைச[illegible]ரேவபோற்றி
[illegible]சிறுத்தொண்டநாயனாரும்
பெ[illegible]பலருத்[illegible]
ம[illegible]வைரசொன்றாவாருஞ்சுவாமி

வசனம்,

சாணை[illegible]பாக்கியாயமோ [illegible]தபப[illegible] [illegible]சிறுத்தொண்டநாயனார தேவரீரை யழைத்துச்சொ[illegible]ன்றா வா[illegible]வாருமையே.

உபாத்தியாயர்-சிறுத்தொண்டருக்குச்சொல்-கவி.

மறுவிலாவெண்குடைத்திங்களந்தவாவென்னையாளும்
சிறுமையிலாமகாத்துமசிறுத்தொண்டநாயனாரே
பொறுமையிலேமிகுபேன்றன்னைப்பொராட்டுசெய்தழைத்த[illegible]தி
உறுதியாய்த்தெரியநன்றாயுவந்தாநீருரைசெய்வீரே

வசனம்.

கேளுந்சிறுத்தொண்டரே பள்ளிக்கூடத்திலிருந்தவென்னை யழைப்பித்தகாரியமதெரியச்சொல்லுமையா.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம,

செல்வமாய்வாழ்ந்தவெங்கள்சீராளதேவனுக்கு
மல்வளஞ்செறியலிங்குவயதுமைந்துமாச்சு

மெல்லவேயிப்படிப்போதவிண்காலஞ்சென்றிடாமற்
கல்விகள்சொல்லுதற்குக்கணமுடனழைத்தேனையா

வசனம். கேளும் உபாத்தியாயரே எனதுகுமாரனாகியசீராளதேவரு க்கு ஐந்துவயதில்கல்விப்பருவமானபடியினாலே அவருக்கு இன்றுமுத லாகசகலகலைக்கியானங்களையுங் கற்பிக்கும்படியாகத் தேவரீரையழைப் பித்தேன் ஆனால்பள்ளிக்கூடத்திற் கனுப்பிவையுஞ் சிறுத்தொண்டரே (அப்படியேயனுப்பிவைக்கிறேன்ஐயரே)

சீராளனைப்பள்ளிக்கூடத்தில்வைக்கிற-பொதுவிருத்தம்.

வாத்தியமுழங்கச்செய்யமறையவர்வேதங்கூறச்
சாத்திரியார்களெல்லாந்தருமநூற்சடங்குசெய்ய
நேத்திரசோதிடத்தோர்வந்துநியமித்தநாழிசொல்லப்
பார்த்துசீராளனைப்பள்ளிக்குவைத்திட்டாரே

உபாத்தியாயர் சீராளதேவருக்குப்படிப்புச்சொல்லுங்
கண்ணிகள்-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

அரிநமோத்நடன்சிந்தம்,அ-ஆ-அறிபிதுவும்-இ-ஈ-நன்றாய்த்தெ ரிந்திடு-உ-ஊ-எ-தெளிபிதுவும்,ஏ-ஐ-இன்னம்விரிவுனர்,ஒ-ஓ-ஔ- விளங்கு,ஃ-ங-முடிவாகுமேநல்ல பரிவுள்ளசீராளா-உயிரெழுத்தாமி வை-பார்த்துங்கவனமிதில்வையுமே.

அப்பால்-இரண்டாமேட்டில்-க-ங-ச-இசைந்த-ஞவுடன்-ட-வ ரிந்திரண்டிட-ண-த-ந-சேர்ந்தபரிவுடன்-மருலம்-உருண்டதுபோல்-ப- ம-ய-வுற்ற-வ-வுடன்-ழ-நீயும்-மருண்டிடாமற்பார்த்திடும் -ள-ற-வ ருத்த-ன-வுடன்சரியிதே.

மூன்றாமேட்டில்-ச-கா-கி-மொழிந்த-கீ-யுடன்-கு-இன்னந்தோ ன்றிய-கூ-கெ-கே-சேர்ந்த-கை-யுடன்-கொ-நலங்கொன்றிடும்-கோ-கௌ க-இவையெல்லாம் உயிர்மெய்களாகுமே, மனமூன்றிநான்சொன்ன தெல்லாம்கவனம்வைத்தால்நானுரைத்திடுவேன் மற்றவெழுத்தெல் லாம்,

உபாத்தியாயர் சீராளருக்குச்சொல்-விருத்தம்.

திருந்தியானிங்கப்போதுசெப்புமுன்னெட்டிற்றானே
பொருந்தெழுத்துகளெல்லாமுன்புபுந்தியில்தரித்தபின்பு
வருகதிடாதினிப்படிக்கமற்றதுசொல்வேனியும்
இருந்துபள்ளிக்கூடத்திலியல்புடன்படித்துவாராய்

வசனம். கேளுஞ்சீராளதேவா இப்போதுநான்சொன்ன எழுத்துக ளெல்லாம் சிந்தையிற்றரித்தபின்புநீயின்னம் படிக்கவேண்டியதற்கெல் லாம நான்சொல்லித்தருகிறேன் உனதுதந்தையனதுசந்தோஷமாகும் படியாகவாசித்துக்கொண்டுவாருஞ்சீராளதேவா (அப்படியேவாசித்துக் கொண்டுவருகிறேன்சுவாமி)

சம்பந்தசுவாமிவருகிற-பொதுவிருத்தம்.

பாழ்படுவுலகவாழ்வின்பற்றினையகற்றியாள்வாய்
வாழ்வினிலுயர்ந்தெங்காளும்மரணமுஞ்சனனமென்னும்

ஆழ்கடற்றெப்பமாக அறையுமைந்தெழுத்தையோதித்
தாழ்விலாத்திருமெய்ஞ்ஞானசம்பந்தசுவாமிவந்தார்

சட்டியக்காரன்—பொதுவசனம்

அகோதெப்படியென்றால் சிறுத்தொண்டநாயனார் சமூகத்துக்குத்திருஞானசம்பந்தசுவாமியார்வருகிறவிதங்காண்க

திருஞானசம்பந்தசுவாமி வருகிற-தரு-இ-ம்-போகனம்-ஆதிதாளம்

திருஞானசம்பந்ததேவரிதோவந்தார்
திடமுள்ளவருமொருவடிவமதெனவரு — திரு
மருவு மாசணிந்தவுருவுகொண்டுவந்தவர்
மறையவர்குலமெல்லாம்-மதிக்கவேயதி-லுதிக்கும்ஆரி — திரு

அன்னையுமைமுலைப்பாலுண்டவர்-மூ
வாண்டிற்றிருப்பதிகம்விண்டவர்
தன்னையறிந்தவனைக்கண்டவர்-இந்தத்
தாரணிபெற்றபுகழ்கொண்டவர்-நிலை
மன்னுஞ்சைவத்துக்காதிமதியிலகும்விபூதி
மின்னுமருத்திராட்சமணி-மிகுந்தவுடனூர-நபந்துவனிபெற — திரு

மாறைபெள்பவையெல்லாமொழிந்தவர்—எழின்
மங்கையராசைதனைக்கழித்தவர்
தீயவுணவைக்காட்டைபழித்தவர்-நல்ல
சிந்தையின்மெய்யருள்கொழித்தவர்-தொழும்
நேயமேலபிமானிநிருமலமானஞானி
யமுனிவர்க்கெல்லாம-இகத்திலேபர-சுகத்தையேதரும் — திரு

சொழிதனிலவதரித்தவர்-பாடித்
தெய்வஸ்தலங்களிற்சஞ்சரித்தவர்
மோகவிகாரங்களைபொரித்தவர்- ஊமர்
முத்துப்பல்லக்கேறிநூல்விரித்தவர்
பாகார்திருக்கூட்டங்கள்பதினாயிரம்பேரும்
வாகாகியதேவாரம்-மகிழ்ந்துமேசொலி-புகழ்ந்துபேசவர — திரு

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

தண்படியார்கள்போற்றுநாயகமணியேபோற்றி
மண்புவிபாவையீந்துவந்தவதரித்தாய்போற்றி
பண்பாலியதேவாரப்பதிகத்தேனளித்தாய்போற்றி
சண்பையிற்றிருமெய்ஞ்ஞானசம்பந்தசுவாமிபோற்றி

இதுவுஞ் சிறுத்தொண்டர்சொல்—விருத்தம்.

இருவிழிசெய்தவத்தாலிங்குனைக்காணப்பெற்றேன்
காமுனஞ்செய்தவத்தாற்கருதிக்கைகூப்பப்பெற்றேன்
சிரமுனஞ்செய்தவத்தாற்சேவடிதாழப்பெற்றேன்
தருமிதுநிதியென்போற்றாரணியிலெவர்பெற்றோர்

வசனம். சரணஞ்சரணஞ்சம்பந்தசுவாமிகளே எனதிரண்டுகண்களுஞ்செய்ததவப்பலத்தினால் உம்மை இன்றுதெரிசிக்கப்பெற்றேன் எனதிரண்டுகரங்களுஞ்செய்த புண்ணியத்தினால் அஞ்சலிசெய்யப்பெற்றேன் எனதுசென்னிசெய்தபுண்ணியத்தினால் உமதுதிருவடிகளைவணங்கப்பெற்றேன் இதனால்உமதுதிருவருளால் சிவஞானசெல்வத்தைப் பெற்றேன் என்போலிவ்வுலகத்தில்யார்பெறுவார்சம்பந்தமூர்த்திகளே

சம்பந்தர்சொல்-விருத்தம்.

சீகாழிதனிலிருந்துதிவ்வியஸ்தலங்கடோறும்
நாகாபரணன்றன்சந்நிதியிற்றிருப்பதிகமோதி
வாகாய்ச்சஞ்சரிக்கும்போதுன்வளமெலாங்கேட்டுப்பின்னும்
போகாமற்காணவந்தேன்புகழ்சிறுத்தொண்டனாரே

வசனம். கேளுஞ்சிறுத்தொண்டரே பரமசிவனெழுந்தருளிய திவ்யஸ்தலங்கடோறும் பதிகங்கள்பாடிப்பணிந்து வருமபோது உமது நற்றிசயங்களைக்கேள்விப்பட்டு உம்மைப்பார்க்கும்படியாயவந்தேன் சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்,

தினந்தினந்தேவர்சேவைதெரிசிக்கப்போறதில்லை
முனஞ்செய்தவமிப்போதுமூண்டிடக்காணப்பெற்றேன்
மனங்கனிந்தலர்ந்தசெந்தாமரைப்பதமலரிற்றங்க
இனஞ்சிலநாள்களிங்கேயிருந்தினிதருளுஞ்சுவாமி

வசனம். சேருஞ்சுவாமிசம்பந்தமூர்த்திகளே ஏதோநான் முன்செய்தபுண்ணியத்தினாலே தேவரீரைக்காணும்படியான பாக்கியம்பெற்றேன் ஆகையாலின்னுஞ்சிறிதுகாலந்தேவரீர் இவ்விடத்திற்றானே வாசமாகஇருந்து நானுய்யும்படியாயனுக்கிரகஞ்செய்யுஞ்சுவாமி.

சம்பந்தர்சொல்-விருத்தம்

அந்திவண்ணனுக்கன்பான அடியவர்தங்கட்கெல்லாம்
முந்தியவன்பரோயுன்மொழிப்படிசிலநாளிங்கே
சந்ததஞ்சிவத்தைநக்கனுஞ்சாஸ்திரத்தையாராய்ந்து
புந்தியுண்மகிழ்ந்துதங்கப்போவன்சிறுத்தொண்டனாரே

வசனம். கேளுஞ்சிறுத்தொண்டரே யப்படியேசிலநாளிங்கே சாஸ்திரங்களையாராய்ந்துகொண்டு உம்முடனே சம்பாஷணையும் பண்ணிக்கொண்டிருந்து பின்புபோவேன்சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

பன்னும்வேதாகமத்தின்பயனெலாம்பதிகமாக்கித்
தன்னிலையுணர்ந்துதெய்வசம்பந்தசுவாமியாரே
மன்னியசெந்தேன்வாசாலக்காரந்தனிலிருப்ப
தென்னசாஸ்திரமகிழ்ந்தேயியம்பிடவேண்டுஞ்சுவாமி

வசனம். வேதாகமத்தின்பொருளையெல்லாம் பதிகமாகச்செய்து தனதுசுயம்பிரகாசவடிவத்தைத் தெரிசிக்கச்செய்யுஞ் சம்பந்தசுவாமியார்

[illegible]

[illegible] இத்திருப்பதானன்சர[illegible] [illegible] [illegible] சுவாமி.

சம்பந்தர்சொல்-விருத்தம்

திருப்பெருந்துறையிலீசன்சிறுகுருந்தடியின்மேவி
அருக்கலைவாய்மணக்கும்மாணிக்கவாசகர்க்கு
பெருந்திருஞ்சிவமேயாசப்பேசிய நூலிதாகும்
திருந்திதன்பெருமையிப்படியாமெனச்செப்புதற்கரிதாமன்றே

வசனம். திருப்பெருந்துறையுள் திருக்குருந்தை விருட்சத்தின்கீழி ருந்துபரமசிவ மானது அன்புபழுத்திதாழிய மாணிக்கவாசகருக் குப தேசஞ்செய்தசாஸ்திரமாகும். ஆகையால் இதன்பெருமையை யளவிட்டுச் சொல்லுதற்கருமையாயிருக்குஞ்சிறுத்தொண்டரே.

இதுவும்-சம்பந்தர்சொல்-விருத்தம்

தத்துவத்தோற்றங்காட்டுஞ்சார்ந்திடுமொடுக்கங்காட்டும்
சத்துச்சித்தானந்தத்திறனிப்பாசிலையுங்காட்டும்
முத்தியின்முடிவுங்காட்டுமோனமுப்பாழுங்காட்டும்
சித்துகள்பலவுங்காட்டுஞ்சிவஞானபோதந்தானே

வசனம். தத்துவத்தின்தோற்றவொடுக்கத்தையெல்லாம் நன்றாயெ டுத்துக்காட்டுஞ் சத்துச்சிததானந்தத்தினிடமுடிவையுங்காட்டும் முப் பாழினிடவொடுக்கத்தையுங்காட்டும் இதுவுமன்றி அனேகஞ்சித்துகளை எல்லாமுடைத்தாயிருக்கின்ற சிவஞானபோதமென்கின்ற சாஸ்திரஞ் சிறுத்தொண்டரே.

சிறுத்தொண்டர்சொல்-விருத்தம்.

சிவமென்னஞானமென்னதெளிந்திடும்போதமென்ன
அவனியிற்றத்துவங்களைந்தகாரணங்களென்ன
பவமலமகற்றியின்பம்பயக்குமுப்பாழ்தானென்ன
தவப்பலனதனுள்வந்தசம்பந்தசுவாமியாரோ

வசனம். சிவமென்பதென்ன ஞானமென்பதென்ன போதமென்ப தென்ன அதிற்றோற்றுந்தத்துவங்களென்ன ஆனந்தத்தைத்தாநின் றமுப்பாழினிடவொடுக்கந்தானென்ன இவையெல்லாமெனக்குநன்றா ய்த்தெளிந்திடச்சொல்லும்சுவாமி.

சம்பந்தர்சொல்-விருத்தம்

சிவமொருபொருளகத்திற்றிகழ்ஞானசத்திதோன்றும்
துவஞானசத்திதன்னிற்றாய்போதமின்பந்தோன்றும்
மவுனவானந்தத்தேனைமருவியுட்புகுந்துவாழ்வார்
அவனியிலாசைநீத்தோரவர்சாயுச்யந்தானே

வசனம்,

சிவமென்புதொருபொருள் ஞானமென்கிறதுசத்தி போதமென் கிறதுஆனந்தம் இதுவேசத்துச்சித்தானந்தமாகவுமிருக்கும இந்தஆன ந்ததேனைச்சதாகாலமுமுண்டு வாழ்கின்றபெரியோர்களது பெருமை யைவேதங்களாலுஞ்சொல்லிமுடியாது சிறுத்தொண்டரே.

சிவத்தொண்டர் சொல் - தரு.

பொருமைசேர்ந்த நாவிற்றொடு பாரியக்கும்
அருமையான நானெசொன்ன பருத்தமாத சொல்லவேண்டும்
தெருவெல்லிக்கசமர்க்குமான தெங்கவுநீ வரிர்மன்
திருவுளம்பற்றவேணுந்தேவரீர் கிருபைதா

னானும். இன்னமிதனிடத்தையேதம் யாவையுமெல்லாம் நன்று
யெனக்குத்தெரியச்சொல்லவேண்டுமெக்கதாவதேவ,

சாமந்தாசொல் - விருத்தம்

பாரினிலே நாண்டிய பருதியாயிலே நூ
நீரினிலே நாமுற்றாம நிறைந்திடவெளியிலே நம்
சீரியவெளியிலே நாந் சேர்ந்தது நமயக்கம் நீ
பாரிமவி நபத்தை நந்த பாதபுமாயியன் நமன் நீ

வசனம். பிரிதிவியிலேதும், அப்புவிலேதும், தேயுவிலேதும், வாயுவி
லேதும், ஆகாயத்திலேதுமாகாயிருந்து அதைவிடத்தைத்து தத்துவங்க
ளாகவுமிருக்கும் சிவத்தொண்டரே,

இதயம் - சம்பந்தர்சொல் - விருத்தம்.

வெளியினிற்பிரிதிவுதால் வியன்றநானபோதம்
தெளிபுனலடுத்தால்பத்தி தேயுவாய்நாரயாசமம்
வளியுடன்சேர்ந்தால்சித்தம வானில்வாறெின் ஞானம்
களிசாதிக்கஞானச் சாட்சியால்சொல்லுகிறதும

வசனம். ஆகாயத்திற்பிரிதிவிசேர்ந்தால் மனம அப்புசேர்ந்தால் புத்
தி தேயுசேர்ந்தால் அங்காரம் வாயுசேர்ந்தால்சித்தம ஆகாயத்தில ஆகா
யஞ்சேர்ந்தால் ஞானம் இந்தஞானபோதத்திருெல் சொன்னதுண்டா
யிருந்தது சிவத்தொண்டரே.

சிவத்தொண்டர்சொல் - விருத்தம்.

இந்தஞானபோத மென்னமதிவுமாதந்த
செந்தமயாயுமைபாரிலே சேவைசெய்ப்பத்
தொல்லைவாயமையாசன்போல நான்மைத நன்செய்தத்தால்
அம்மியானந்தனிக்க அமைந்தமவபவேனைன்

வசனம். அதுபோலநினைமார்கள் இப்படிதொகையுமரில்லைசேத
வீரிந்த நாளையபோல்வந்த அதனிசரிப்படியிருலே முப்பமலங்க
ளுயிந்தநிலையவழுமைசேன் சம்பாசமாமிருளே.

சம்பந்தர்சொல் - விருத்தம்.

நிலைநிலைமைகொள்ள ன்கலைச்சிறிதுவேயய
கலையடனேபொரு நாசெலைகூதந்திடுமே

சிவத்தொண்டர் - வசனம்.

சாணத்திரமாம் அடியேபோய்வாருஞ் சம்பந்தசுவாமிகளே.

சிவத்தொண்டர்சொல் - விருத்தம்.

சுந்தமாயிலேதோர் தாய்சிவனருமாரிலவா
சிந்தையமாயத்திலே நிலையுமிவைநந்தனேனன்

சிந்தையாய்த்தேடிக்கொணர்வாய் சீக்கிரமாய் நானுமேவுறேன்
சந்தனத்தையலோடுந் தங்கையுடனிருந்திடாயே

வசனம். கேளாய்பெண்ணே திருவெண்காட்டுநங்காய் சிவனடியார்க்கில்லாமல் நான்அன்னம்புசிக்கிறதில்லையே இன்றையதினம் இவ்விடத்தில் ஒருவரும்வரக்காணோமே ஆகையால் நான்போய் அடியார்களை அழைத்துக்கொண்டுசீக்கிரமாகவருகிறேன் நம்முடைய சந்தனநங்கையுடனே கூட பத்திரமாகஇரு பெண்ணே.

திருவெண்காட்டுநங்கையார் — கவி.

எங்களடியாரன்றி மற்றவர் போசிப்பதில்லை
இங்குயான்தேவரன்றி வெளியவளைபுசிப்பதுண்டோ
தங்குநம்மிருவரன்றி சந்தனமிருந்துவாளோ
சங்கையில்விரதநாதன்பர் தமைத்தேடிவா நற்சுவாமி

வசனம். அப்படியேநீர்போய் சிவனடியார்களைத்தேடிச் சீக்கிரமாக அழைத்துக்கொண்டுவாருங்கள்.

இராகம்-சாவேரி — ஆதிதாளம்.

கணபதிச்சரத்தில்வாழுக	தேவா-நல்ல
சங்கமமாகக்காதலுமொழி	நாவா
குணவடியார்களின்று	காணேனே-பணக்
குறித்தவர்களைத்தேட	நாணேனே
தொண்டர்களன்றியன்னம்	அருந்தேனே-விதி
தோன்றிடக்கண்டான்மனம்	வருந்தேனே
கொண்டவிரதமின்று	விடலாமோ-அந்த
குறைமுடியாமலென்னைத்	தொடலாமோ
ஈசனுமென்னைக்குறை	செப்பிடுவோ-பூசைச்
சோதுபவர்களைக்	பொய்ப்பேனோ
நேசவடியார்கள்பணி	வைப்பேனோ-அய்யா
நின்றபட்சிமையக்கல்லா	செய்ப்பேனோ
நாயினவருகிடா	வரலாமோ-உருத்தி.
நாடப்புசவிருதுயர்	தாலாமோ
துன்பமகலவேயாண்டு	நாதா-பரந்
சோதியென்றுள்ளிடமீ	பாதா

சிறுத்தொண்டர்சொல — விருத்தம்.

நற்பெரும்புவியிலின்று நல்லசிவனடியார்களை
மெய்ப்படக்கண்டிலேனிங்கு விருந்தயர்ந்திடத்தாமில்லை
செப்பருமுமையாள்பங்கன் திருவுளச்செயலதான
இப்படியிருந்தால்வேறு பெரியதோர்தெய்வமுண்டோ

வசனம். அரகராசிவசிவா இனிஎன்னசெய்யப்போகிறேன் இந்தவூ ரெங்குந்திரிந்தாலும் ஒருசிவனடியார்களையுங்காணோமே கண்ணாலேபார் வது தெரிசனம்பண்ணலாமென்றுபார்த்தால் ஒருவருமில்லையே கடவு

ளே உனது திருவுள்ளச்செயலிப்படியிருந்தால் நானென்னசெய்வேன்ப ரமசிவமே.

இதுவும்-சிறுத்தொண்டர் சிவனடியார்களைத்தேடுகிற

தரு-இ-ம-காம்போதி-ஆதிதாளம்.

T·12753

தினம்வருவோர்சங்கின்றடையேனோ — அரன்
செய்யஅப்பரிலநான்கடையேனோ
அனுபசாரபாயப்படையேனோ — வருநம்
அராதனைசெய்நன்றாய்த்தடையேனோ
இன்னமிரக்கிலென்றுபறியேனோ — அவர்
கண்ணாமிப்பாபென்றுதேடிபேனோ
பின்னமறுதிவிறசெயலாமோ — இருடா
பேசதப்பிப்புனைகபலாமோ
வானமறியாமலேமைதானோ — சொக்க
மனமறியாதவர்தாப்பிமுபாண்டோ
ஆனமாமிசனாபரசியமுனோடோ — கண்ணுள்
அரனைமடவைவைலோடுசெய்துண்டோ
எழிலினிநாராசபெருா — முன்னம
இசாதநாதப்ரிபாராபேவர
தொபபுனிதனசிவபாதா — திலம்
ஆதிநடிபாதனைசெய்தீர

விபரீதக்த-போதவிருத்தம்.

எவ்விலாதமுன்னிரிந்தவிளைத்திருவாமிசங்கீச
செய்யவபரிபுனர சித்திராணடநயனையார
வெப்பொரிசியரவிருந்துவேடகசம்பம்வுமாறுதிப்
பயிரவநுரயகொண்டபாரிசிகைவருகின்றரே
சட்டுயாசாரன்தொர-வசனம்.

அச்சமயத்திலப்பெண்றாய சிறுத்தொண்டரானவர் சிவனடியார்க ளொருவரையுங்காணாமற்போனதால் அவ்வமயமனைகசேர்ந்து நடமாடியா ரப்பாரசிவனுனவர் நடந்து திருவுருவநைமறைத்து பயிரவருபங் கொண்டு வந்திருக்கிறார்.

பயிரவர்-வயிரவநுபங்கொண்டுவந்தது-கந-இராகம

செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பார்வதியாரேவயிரவர்போலாராகநாமே
நேசாதிநபிலாசநனிமிருதிந — நகன்
முந்தபாவாமிரராநசசடைமுடித்து
முப்பாசாதுபரிவேபோலசீயயிரிசெறிய
விநைநாமிறைவெகுநத்துபபைபபணிபலகா
பேயுநராமைசுயெனத்தாவிபதிலபொநம
சொருநசதுடன்புடிதசஅதிபிறையைநெற்றி
நோணடநதிலநபாபூன்றிமியவிலநிந்து

சந்திரக்கோலமறைந்த அந்தத்துடன்மீதிற்
றழைத்தசடையணிந்துகுழைத்தவிபூதியுடன் ஈசர்
அடுத்தகலைமதியும்மதித்தசுடருடனே
ஆடுமொளிசெய்மணித்தோடுஞ்செவிபரவத்
தடுத்தற்கரியவிடங்கரித்தகளமறைத்து
நாலுபடிகமணிக்கோவைதனைப்புனைந்து
எடுத்தஅயன்கபாலமவிழ்த்ததகத்தொளிர
விலகிப்பொளிர்திரிசூலமொருகைதனில்மருவ
அடுத்தவலக்கையினிலுடுக்கையிசைசெளங்கும்
ஆரபாரமுடனேவாரிபோலமுழங்க ஈசர்
சங்கக்கலைகள்கற்றதுப்பெரியோருளஞ்
சாரசெவியிலூணைவீரக்கழலொலிக்க
புங்கக்கபவைடிதாங்கிப்புவிநடக்கும்
பொருவினியகிலோநுமணமகிழத்
தொங்கலையலைகளர்க்குமந்தத்துடல்நடிக்கத்
தோறுமயமிபாவிணமயாதுறுவர்கள்போல
இங்கிதமெதாடிசிறுத்தொண்டர்மனையைத்தேடி
இருந்தபூங்கூடத்தொடார்ந்தவனாயுங்கேட்டு ஈசர்

சுவாமியார் அன்னங்கேட்கிற-விருத்தம்.

அருப்பசிதனக்கிவ்வேளை அன்னமேபடைப்பாருண்டோ
பொருப்பசிதன்னில்நாம் பிரகுதைமிலேபோசெய்ய
கருமமுமென்மொழியார்தமிழ்ச்சுபுளோரிலையோவன்னம்
விருமபுவரோவென்று வினவுவாரிலையோசொல்வீர்

வசனம். அரகரசிவசிவ என்றுடையகொடிதாகியபசிதீர ஒருபிடியன்னமிடுவாரில்லையா அல்லதுதுறைச்சற்றுடையாதாயுமில்லையா யன்பசியன்னத்தானேவருந்துதே என்னவென்று கேட்பாருமில்லையே கர்த்தனே.

சுவாமியார் வீதியில்நின்று அன்னங்கேட்கிற தரு

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

அன்னமளிப்பவர்யாருமில்லையோ-மிக
அருப்பசிபொறுக்கமாட்டேன்செய்வேனே
இனையறியாமலிங்கே இருந்துமயங்குகின்றேன்
மனமறிந்தஅடியர்வாய்க்கவில்லையோபிடி அன்ன
இந்தவூரெல்லாமறியாயோ-அணி
எதன்மேடைக்கூத்தையுங்குறியாரோ
வந்தவிருந்தையேலமகனாகனுமெதன்சண்கள்
குந்திவிருந்துணையயுங்கொண்டுநடந்தேன்பிடி அன்ன
முன்பின்னறிந்திருக்குஞ்சொல்வீரோ-பசி
முடிக்குதிடமாகவுஞ்சொல்வீரோ
அன்பமைந்தலைவருந்தேசாரணித்தாலும்போதும

பன்பசிக்குந்தறியின்வகைகள்வேண்டுமோபிடி அன்ன
எத்தனை தூரமொன்றுநடப்பேனே—இங்கே
எழில் சிறுத்தொண்டாமனையெது தாமோ
உத்தமர்களுமொரு உத்தமிகளில்லையோ
சற்றுமிரங்கினானைதன்னைபெறுங்காட்டீரோ அன்ன

சுவாமியார்சொல்-விருத்தம்.

பசித்தெனுங்கிரம்பஆவின்பாலுநல்லன்னத்தோடும்
புசித்தினுங்கிடையாதென்றுபுழுங்கிடவரினுமமை
நசித்திடப்பார்க்கமாட்டார்நர்பன்மெய்ஞ்ஞானதத்வ
மசியபொருளானதெய்வமகத்துண்டுப்பயப்படோமே

வசனம். ஓர்அரகராசிவசிவாகர்த்தனே மிகவும்பசியினாலே வருத்தமுற்றாலும் அல்லதுபாலுடன்கூடஅன்னம்புசித்தாலும் ஒன்றுங்கிடையாமல் வருத்தத்தையடைந்தாலும் தத்துவமசிப்பொருளானதெய்வம் உன்னுள்ளத்திலிருக்கிறபடியினாலே நான்ஒன்றுக்குமபயப்படுவதில்லை உலாத்தநாரே.

சுவாமிக்குச்சந்தனநங்கைசொல்—விருத்தம்.

தொழுந்தொறுமின்பமேவுஞ்சோதியைப்போலவிங்கே
எழுந்தருள்தேவாபோற்றிபெறில்சிறுத்தொண்டர்வாழுஞ்
செழுந்திருமாளிகைக்குள்ளிசைமாசதாழி
விழுந்திடி புன்னைவாகுதப்பசிதணிக்கலாமே

வசனம். கேளுந்சுவாமிசங்கமதேவரேஇதுசிறுத்தொண்டநாயனார் மடமங்கேவந்தால் உமதுபசிதீரப்போசனம்பண்ணலாமவாரும்சுவாமி.

சுவாமியார்சொல்-விருத்தம்.

சொன்னாயொளிநற்பச்சைத்தோகைமாமயிலேவெள்ளை
அன்னமபோலுமைந்தேர்வஅறுபுதவழுதேகேளும்
பன்னியமடியாருக்குமகிழுடனன்னமீய
உன்னியதொண்டாரேனுந்தன்வீட்டிலிருக்கின்றாரா

வசனம். கேளாய்தாயேயுன்னைப்பார்த்தால் மகாஉத்தமியாக இருக்கிறது இந்தவளவிலேசிறுத்தொண்டரிருக்கிறாராசொல்லுமம்மா.

சந்தனநங்கைசொல்—கவி

வாடியேபசித்துவந்தமாதவ முனிவர்கோவே
தேடியேயடியாரிங்குகுறியேவரக்காணமல்
ஓடியேதொண்டரபோனார்செப்பியவொருநொடிக்குள்
நாடியேவருவார்சற்றேநின்னுந்தசேவடிகள்போற்றி

வசனம். கேளுஞ்சுவாமி சங்கமதேவரே எங்கள் சிறுத்தொண்டநாயனார் சிவனடியார்களைக்காணமல் தேடிப்போயிருக்கிறார் இன்னஞ்சற்றுநேரத்திலேயிவ்விடம்வருவார் தேவரீர்இந்தத்திருமாளிகைக்கு எழுந்தருளவேண்டுஞ்சுவாமி.

சுவாமியார்சொல் விருத்தம்.

விழுந்தமுன்தொழுதுபோற்றிமென்மனைதன்னில்வந்திங்
கெ றுமென்றெமக்கேயியம்பியமயிலேகேளாய்

அழுந்திய அன்பின்மிக்க ஆண்பிள்ளைதானில்லாத
செழுந்திருமனையினுள்ளேசெல்லுமரியாதையன்றே

வசனம். ஆனாலுங்கேளுந்தாயே புருஷனில்லாதமனையானபடியினால் உள்ளேவருகிறது மரியாதையல்லஅம்மா.

சந்தனநங்கைசொல்-விருத்தம்.

அருமைமாதவரொருத்தரானுகிநம்மனையைச்சார்ந்து
தெருவினில்நிற்கின்றார்பூஞ்சேவடிவணங்கியுள்ளே
வருகவென்றழைத்தேன்மாதர்வாழுமில்லிடத்திற்றங்கப்
பெருமரியாதையல்லவென்றனர்பெரியோரம்மா

வசனம். கேளுமம்மாதிருவெண்காட்டுநங்காய் நம்முடையதெருவீதியில்மகாபெரியவர் ஒருத்தர்வந்திருக்கிறார் அவரைநமதுதிருமாளிகைக்குள்ளேவரச்சொல்லியழைத்தால் ஆண்பிள்ளையில்லாதமனையிலேவருகிறதுமரியாதையல்லவென்றிருக்கிறாரம்மா (ஆனால்அவரைக்கண்டுதெரிசனஞ்செய்துவரலாம்வாருமம்மா)

திருவெண்காட்டுநங்கையார்-கலி.

இருவிழிகளிக்குமங்கையேபோற்றி
மருவியசந்தனமாதவளேபோற்றி
தருணமேபோந்துதவுந்தயாநிதிபோற்றி
அருளுடனேவந்தவாபோற்றி

திருவெண்காட்டுநங்கையாரும் வயிரவமூர்த்திக்கும்நடந்த
சம்பாஷணை-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

திருவெ-இங்குவந்ததேதுமூர்த்தி—நான்
இறைஞ்சுவேயடிபோற்றி
கங்கையணிந்தசடைக்கடவுள்போலேசெழித்து
காசினியோர்பாவக்காயமழுங்கப்புகுந்து இங்கு
வயிரவர்-சிறுத்தொண்டர்மனையிதுதானோ-அவர்
தேவியானவளெவர்தானோ
பொறுத்தருளாநதிபோலுங்கற்பினிசாலி
புண்ணியமேயுருவாகநன்னும்பாக்கியசாலி சிறுத்
திருவெ-நானிலம்புகழ்சிவகாமீர்—ஒரு
நாயகர்போல்வருஞ்சுவாமி
தேனிருந்தொடைத்தொண்டர்மனையிதுதான்
சேவடிக்கன்புசெய்தேவியேயிவள்தான் நானில
வயிரவர்-வடதேசந்தன்னிலிருப்போம்—இந்த
மாநிலமெங்குஞ்சஞ்சரிப்போம்
நடமாடுஞ்சிவநாதர்கடியனென்ற
நாதனைக்காணவேநாமும்வந்தோமின்று வடதே
திருவெ-ஐயாவும்பநக்காளானார்—சிவன்
அடியவரைத்தேடிப்போனார்

உய்யவிப்பணியினிலொருநொடிபொறுக்கும்
ஓகரிபதொண்டருடனிவருவாரிங்கு — ஐய

வயிரவர்-இலட்சுமிபோலொளிர்நல்லாய்-நாம்
இருப்பதற்காய்ச்சொல்லவில்லை
இலக்கணமாகியவிருப்புமுன்னுதா
இறைவனில்லாவீட்டிலிருந்திடவொண்ணாது — இல

திருவெ-சங்கரன்போல்வருநாதாசற்றே
தங்கவே நீர்செய்யலாகாதா
